தருமபுரி மேற்கு மாவட்டம் செட்டிக்கரையில் தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் பொதுமக்கள் மற்றும் கழகத்தினரை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தார். உடன் ஒன்றியச் செயலாளர்கள் பிரபு ராஜசேகரன், மாது, சக்திவேல் வர்த்தகர் அணி முனுசாமி மற்றும் கழகத்தினர் உள்ளனர்.

கடந்த கால திராவிட மாடல் அரசின் சாதனைத் திட்டங்களை

மக்களிடம் கொண்டு செல்ல ஆர்வம் காட்டாத பள்ளிக் கல்வித்துறை!

திருப்பூரில் அரசுப் பள்ளிகளில் மாணவ, மாணவியர்கள் சேர்க்கை மந்தம்!

திருப்பூர், மே 23- கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற்ற கடந்த கால திராவிட மாடல் அரசின் சாதனை திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்ல ஆர்வம் காட்டாத பள்ளிக்கல்வித்துறையால் திருப்பூரில் அரசு பள்ளிகளில் மாணவ, மாணவியர்கள் சேர்க்கையில் மந்த நிலை ஏற்பட்டுள்ளது.

திருப்பூர் மாவட்டத்தில் 2026-27ம் கல்வி ஆண்டிற்கான அரசு பள்ளி மாணவ, மாணவியர் சேர்க்கை நடவடிவக்கைகளில் கல்வித்துறை போதிய ஆர்வம் காட்டவில்லை என்றும், இதனால் சேர்க்கை மந்தமாகும் சூழல் நிலவுவதாகவும் சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற்ற கடந்த கால திராவிட மாடல் ஆட்சியில் அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரிக்க பல்வேறு அதிரடி முன்னேற் பாடுகள் செய்யப்பட்டன. குறிப்பாக, அரசு சார்பில் மாணவர்களுக்கு வழங்கப்படும் விலையில்லா பாடநூல்கள், நோட்டு புத்தகங்கள் சீருடைகள் மற்றும் சைக்கிள் வழங்கும் திட்டங்கள் குறித்தும், உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் புதுமைப்பெண் திட்டம் மற்றும் மாணவர்களுக்கான தமிழ் புதல்வன் திட்டம் குறித்தும் விரிவான விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டது.

மேலும், அரசு பள்ளி மாணவ, மாணவியர்களின் உயர்கல்வி கனவை நனவாக்கும் நான் முதல்வன் திட்டம், தமிழ் வழியில் கல்வி பயின்ற மாணவ, மாணவியர்களுக்கான 20 சதவீத இடஒதுக்கீடு, அரசு பள்ளி மாணவ, மாணவியர்களுக்கான 7.5 சதவீத மருத்துவக்கல்வி இடஒதுக்கீடு மற்றும் மாணவர்களின் சிந்தனையை தூண்டும் அறிவியல் சுற்றுலா உள்ளிட்ட வரலாற்று சிறப்புமிக்க திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு பேனர்கள் அரசு பள்ளிகளின் முன்பாக பிரம்மாண்டமாக வைக்கப்பட்டன. இந்த திட்டங்களால் ஈர்க்கப்பட்டு தனியார் பள்ளிகளுக்கு நிகராக பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை அரசு பள்ளிகளில் சேர்க்க ஆர்வம் காட்டினர். இதனால், கடந்த ஆண்டுகளில் திருப்பூர் மாவட்டத்தில் மாணவ, மாணவியர்கள் சேர்க்கை கணிசமாக உயர்ந்தது. ஆனால், நடப்பு 2026 27ம் கல்வி ஆண்டு தொடங்குவதற்கு இன்னும் சில வாரங்களே உள்ள நிலையில், திருப்பூரில் உள்ள பெரும்பாலான அரசு பள்ளிகளில் மாணவ, மாணவிகள் சேர்க்கையை அதிகரிப்பதற்கான எந்தவித

விழிப்புணர்வு பேனர்களோ அல்லது முறையானமுன்னேற்பாடுகளோ இதுவரை செய்யப்படவில்லை. கல்வித்துறையும், பள்ளி நிர்வாகங்களும் மாணவர் சேர்க்கையை தீவிரப்படுத்து வதில் போதிய ஆர்வம் காட்டாத நிலை நீடிக்கிறது. மார்ச் 1ம் தேதி அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கை தொடங்கிய நிலையில், இரண்டு மாதங்களாக திருப்பூர் மாவட்டம் முழுவதும் உள்ள 14 ஒன்றியங்களிலும் சேர்த்து இதுவரை வெறும் 3,500 முதல் 3,700 வரையிலான மாணவ, மாணவியர்கள் மட்டுமே அரசு பள்ளிகளில் சேர்ந்துள்ளனர். அரசு பள்ளிகளின் உள் கட்டமைப்பு மற்றும் தமிழக அரசின் கல்வி நலத்திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்த்து, மாணவ, மாணவியர்கள் சேர்க்கையை உடனடியாக தீவிரப்படுத்த மாவட்ட நிர்வாகமும், கல்வித்துறையும் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர் கூட்டத்தில் அறிவித்ததற்கிணங்க, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி, தென்காசி தெற்கு மாவட்டம், தென்காசி, கடையநல்லூர் தொகுதிகளில் 'கள ஆய்வுக் குழு' ச.முரசொலி எம்.பி., சேலம் உமாராணி ஆகியோர் கீழ்க்காணும் விவரப்படி ஆய்வு செய்கின்றனர்.

1.6.2026 - தென்காசி சட்டமன்றத் தொகுதி - டிரிஸ்லில் எலைட் மஹால் - இலஞ்சி.

2.6.2026 - கடைய நல்லூர் சட்டமன்றத் தொகுதி - எஸ்.எஸ்.கிராண்ட் மஹால் - அச்சம்பட்டி - கடையநல்லூர்

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 22.05.2026

தலைமைக் கழகம்,
தி.மு.க.

சட்டமன்றத்தொகுதி-களஆய்வு!

கழகத் தலைவர் ஆணைக்கிணங்க காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் அறிவிப்பின்படி காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் சட்டமன்றத் தொகுதி "கள ஆய்வுக் குழு" திருமதி ஹெலன் டேவிட்சன் Ex. MP , தலைமைச் செயற்குழு உறுப்பினர் இளமகிழன் ஆகியோர் அடங்கிய குழு வரும் 25 ஆம் தேதி முதல் சட்டமன்றத் தொகுதிகளில் கீழ்க்காணும் விவரப்படி சட்டமன்றத் தேர்தல் குறித்த கள ஆய்வு மேற்கொள்ளவிருக்கிறது.

தொகுதி	நாள்	இடம்
செய்யூர்	25.5.2026 திங்கட்கிழமை	சுபம் கன்வென்ஷன் நெல்வாய்பாளையம்
மதுராந்தகம்	26.5.2026 செவ்வாய்க்கிழமை	மாநகர கழக அலுவலகம் மதுராந்தகம்
உத்திரமேரூர்	27.5.2026 புதன் கிழமை	வார் ரூம் உத்திரமேரூர்
காஞ்சிபுரம்	28.5.2026 வியாழக்கிழமை	கலைஞர் பவள விழா மாளிகை, காஞ்சிபுரம்

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 21.5.2026

தலைமைக் கழகம்
தி.மு.க.

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு

மாநில நிர்வாகிகள் - மாவட்ட அமைப்பாளர்கள் கூட்டம்!

ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி அறிவிப்பு!

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள் கூட்டம், வருகிற 25-5-2026 திங்கட்கிழமை காலை 11.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், எனது தலைமையில், ஆதிதிராவிடர் நலக்குழுத் தலைவர் மருதூர் ஏ.இராமலிங்கம் - துணைத்தலைவர் மா.மதிவேந்தன் ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர்கள் விழுப்புரம் புஷ்பராஜ், வி.பி.இராஜன், திப்பம்பட்டி ஆறுச்சாமி - துணைச் செயலாளர்கள் பெரம்பலூர் பா.துரைசாமி, மு.பொன்தோஸ், மு.பரமானந்தம், சி. தசரதன், சா.இராசேந்திரன், மாரியப்பன் கென்னடி, தருமபுரி கொ.ரமேஷ், மதுரை ந.சிவக்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட அமைப்பாளர் மட்டும் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

பொருள் : 1. ஜூன் 3- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள்.
2. கழக ஆக்கப்பணிகள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 21.05.2026

ஆ. கிருஷ்ணசாமி,
செயலாளர்
தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு

காட்டுத் தீக்கான காரணங்கள் அறியப்படாமல் இருக்கலாம்; ஆனால்

காட்டுத்தீ இயல்பாகவே அணைந்துவிடும் அல்லது அணைக்கப்படும்!

திராவிட முன்னேற்றக் கழகம் 1949-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17ஆம் நாள் திராவிட கழகத்திலிருந்து பிரிந்து பேரறிஞர் அண்ணாவால் உருவாக்கப்பட்டது என்பது வரலாறு. திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு இயக்கமாக என்றைக்கும் இயங்கிக் கொண்டிருக்க வேண்டும் என்ற தொலைநோக்குச் சிந்தனையில்தான், பேரறிஞர் அண்ணா அவர்கள் கழகக் கட்டமைப்பைப் பொருத்தமாக உருவாக்கினார். பேரறிஞர் அண்ணாவின் மறைவிற்குப் பின்னர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கழகக்கோட்டையை வலுப்படுத்தினார்-பாதுகாத்தார்.

கழகம் தொடங்கி 18 ஆண்டுகால நிறைமுடிவில் தமிழ்நாட்டின் சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்று பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் தி.மு.க. ஆட்சி அமைந்தது. பேரறிஞர் அண்ணாவின் குறுகியகால ஆட்சியில் மூன்று முக்கிய சமுதாய - அரசியல் மாற்றங்களைப் பிரதிபலிக்கும் சட்டங்களை உருவாக்கினார்கள். சுயமரியாதை திருமண அங்கீகாரத்திற்கான சட்டம், தமிழ்-ஆங்கிலம் என்ற இருமொழிக் கொள்கைக்கான சட்டம், சென்னை மாகாணம் என்பதை மாற்றி "தமிழ்நாடு" என்று பெயர் சூட்டிய சட்டம். இந்த மூன்று சட்டங்கள் என்றும் மறக்க முடியாத-மறைக்கமுடியாதவரலாற்றுப்பதிவுகளாகும்.

பேரறிஞர் அண்ணாவின் மறைவிற்குப் பின்னர் முதலமைச்சர் பொறுப்பேற்று ஆட்சி அமைத்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பட்டியலின-பிற்படுத்தப்பட்ட சமூகங்க ளின் கல்வி - வேலை வாய்ப்புகளில் ஒதுக்கீடு கள், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் "சமத்துவ புரங்கள்", மாநில சுயாட்சிக்கான குழு வமைத்து, அவர்களது அறிக்கையினை ஆவணப்படுத்தி, மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்ற கோட்பாட்டை இந்திய ஒன்றியத்தில் அடங்கிய அனைத்து மாநிலங்களிலும்விழிப்புணர்ச்சியைஉருவாக்கினார். ஜனநாய கத்தைப் பாதுகாக்கும் வகையில், இந்திரா காந்தியின் அவசரகால நிலைமைப் பிரகடனத்தை எதிர்த்து முறியடித்தார். இப்படி எழுதிக்கொண்டே போகலாம்.

பொன்.முத்துராமலிங்கம்
முன்னாள் அமைச்சர்
கழக உயர்நிலை
செயல் திட்டக்குழு உறுப்பினர்

முத்தமிழறிஞர் கலைஞரின் மறைவிற்குப் பின்னர், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் கழகத்தை வளர்த்ததோடு கால மாற்றங்களை எதிர்கொள்ளும் வகையில் "திராவிட மாடல்" ஆட்சி முறையை திட்டமிட்டு "எல்லோருக்கும் எல்லாம்" என்ற சமூகநீதிக் கோட்பாட்டின் அடிப்படை யில், கல்வி-சுகாதாரம்-பெண்ணுரிமை ஆகிய உரிமைகள், வாய்ப்புகள், வசதிகள் ஆகியவை அடித்தட்டு மக்களுக்கும் எளிதில் கிடைக்கும் வகையில், சட்டங்களையும், திட்டங்களையும் உருவாக்கி வரலாற்றுச் சாதனை படைத்தார்கள். இந்திய ஒன்றியமே வியப்புற்று வியந்து பாராட்டும் அளவிற்கு இந்திய அரசியல் அரங்கத்தில் உயர்ந்து நின்றார் - இனியும் நிற்பார் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.

கடந்த காலங்களில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி, அதிகாரங்களைப் பெற்ற நிலையில், தமிழ்நாட்டு மக்களுக்கு சாதித்துக் காட்டிய சாதனைகள் என்பது அளப்பரியது. இந்த சாதனைகளையும் கடந்து, உலகிலேயே மிகப்பெரிய "ஜனநாயக நாடு" எனக் கருதப்படும் இந்திய ஒன்றியத்தில், ஜனநாயகத்திற்கு மிகப்பெரிய அளவில் சோதனை உருவாக்கப்பட்ட காலகட்டத்தில் இந்திய அளவில் மிகப்பெரிய போராட்டக் களங்களை அமைத்து இந்திய ஜனநாயகத்தைக் காப்பாற்றிய பேரியக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் என்பது இந்திய வரலாற்றில் விரிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆங்கிலேயரிட மிருந்து விடுதலைப் பெற்ற இந்திய ஒன்றியப் பகுதியிலுள்ள மாநிலங்கள் தன்னாட்சி பெற்றமாநிலங்களாகவும், மத்தியில்கூட்டாட்சியாகவும் அமைந்து செயல்பட உரிய அரசியல் அதிகாரப் பகிர்வு வேண்டும் என்கின்ற அனைத்து மாநிலங்களுக்கான போராட்டத்தை முன்னெடுத்து தொடர்ந்து அந்தப் போராட்டத்திற்கு நாடு முழுவதும் வலிமை சேர்த்துக் கொண்டிருக்கும் இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை யாராலும் எளிதில் மறந்துவிட முடியாது.

இந்திய ஒன்றியத்தில் சமூக அவலங்களை அடியோடு ஒழிக்க வேண்டும். தமிழ்நாட்டில் ஏற்றத்தாழ்வற்ற சமத்துவ சமுதாயம் உருவாக்கப்பட வேண்டும் என்பதன் தொடக்கமாக அனைத்து சமூக பிரிவினரும் அர்ச்சகராகலாம் என்ற சட்டத்தை நிறைவேற்றி அமல்படுத்திய சமூகப் புரட்சியாளர்கள் இயக்கம் தான் தி.மு.க.!! இங்குள்ள தமிழர்களுக்கு மட்டுமல்லாமல் உலகளாவிய தமிழர்களுக்கும் குறிப்பாக, இலங்கை வாழ் தமிழர்களின் அனைத்து கோரிக்கைகளுக்கும் துணை நின்றதோடு அதற்கான களத்தை தமிழ்நாட்டில் அமைத்துக் கொடுத்து அதற்கு விலையாக திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சியையே பறி கொடுத்தது என்பதோடு, இந்திய நாட்டின் ஜனநாயகத்தைக் காப்பதற்காகவும் திராவிட முன்னேற்றக் கழகம் தன் ஆட்சியை விலையாகக் கொடுத்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னணித் தலைவர்களும், தொண்டர்களும் பல்லா யிரக்கணக்கில் பலமுறை சிறை சென்று தமிழ் மக்களின் உரிமைகளைக் காத்த இயக்கம் என்பதை தமிழ்ப் பெருங்குடி மக்கள் இனியாவது எண்ணிப் பார்க்க வேண்டும்.

நம் தாய்த்தமிழ் மொழி காக்க இந்தித்திணிப்பை எதிர்த்து, தங்கள் தேக்குமர தேகங்களில் தீயிட்டுக் கொண்டு மாண்ட வரலாற்றை உலகம் வியக்க உருவாக்கியவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தீரர்கள் என்பதை இன்றைய இளைஞர்களுக்கு நினைவுபடுத்துவது ஒவ்வொருவரது தலையாயக் கடமையாகும். இப்படி குருதி தோய்ந்த தியாக வரலாறு உலக வரலாற்றில் சில இயக்கங்களுக்குத்தான் உண்டு என்பதையும் இந்த கட்டுரையின் மூலம் தெரிவிக்க விரும்புகிறேன். இங்கு நான் தெரிவித்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் சாதனைகளின் பெருவெள்ளத்தின் சிறுதுளிகள் மட்டும்தான் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

எனவே திராவிட முன்னேற்றக் கழகம் எத்தகைய அரசியல் சூழ்நிலைகள் உருவானாலும் அதனை எதிர்கொண்டு சந்திக்கும், சமாளிக்கும், வெற்றி கொள்ளும் என்பது மட்டும் உறுதி. காட்டில் உருவான பெரும்நெருப்பிற்கு காரணங்கள் அறியப்படாமல் இருக்கலாம். ஆனால், அந்த காட்டுத்தீ இயல்பாகவே அணைந்துவிடும் அல்லது அணைக்கப்படும் என்பது மட்டும் உறுதி.

இந்த உணர்வோடும் உணர்ச்சியோடும் நமது இயக்க வழித்தடத்தில் குறுக்கிடும் நச்சுக்கொடிகள் அடையாளம் கண்டு அப்புறப்படுத்திவிட்டு திராவிட இயக்கத்தின் வழித்தோன்றல் வழிகாட்டும் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தலைமையில் புதிய உணர்வோடும், உத்வேகத்தோடும் அணி வகுப்போம்! வெற்றி காண்போம் வாரீர்!!

சி.பி.எஸ்.இ. 12ஆம் வகுப்புத் தேர்வில் குளறுபடி!

டெல்லி, மே 23- சிபிஎஸ்இ 12ஆம் வகுப்பு விடைத்தாள்களை திருத்த கடைபிடிக்கப்படும் ஆன் ஸ்கிரீன் மார்க்கிங் எனப்படும் டிஜிட்டல் முறை ரத்து செய்ய கோரிக்கை எழுந்துள்ளது. அண்மையில் வெளியான சிபிஎஸ்இ 12ஆம் வகுப்பு பொது தேர்வில் ஓஎஸ்எம் எனப்படும் ஆன் ஸ்கிரீன் மார்க்கிங் டிஜிட்டல் காரணமாக எதிர்பார்த்ததை விட குறைவாக மதிப்பெண் வழங்கப்பட்டுள்ளதாக மாணவர்கள் வேதனை தெரிவித்துள்ளனர்.

ஜே.இ.இ. போன்ற நுழைவு தேர்வுகளில் வென்ற மாணவர்கள் கூட மிக குறைந்த மதிப் பெண்களை பெற்று இதில் தேர்ச்சி பெறாமல் போனது சந்தேகங்களை எழுப்பி உள்ளது.

மாணவர்களின் கவலையை போக்க ஒன்றிய கல்வி அமைச்சகம் விடைத்தாள் நகல் பெறும் கட்டணத்தை 200 ரூபாயில் இருந்து 100 ரூபாயாக குறைத்த போதிலும் அதற்காக விண்ணப்பிக்கும் சிபிஎஸ்இ இணையதளத்தில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப கோளாறு மாணவர்களை மேலும் தவிக்க விட்டுள்ளது. இந்த ஆன் ஸ்கிரீன் மார்க்கிங் முறையால் மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்பு பாதிக்கப்படுவதாக கூறும் கல்வியாளர்கள் இந்த முறையை ரத்து செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஒன்றிய அரசின் பெட்ரோல் – டீசல் விலை உயர்வை திரும்பப் பெறவும், விலைவாசி உயர்வைக் கண்டித்தும் மத்திய தொழிற்சங்கங்கள் வேண்டுகோளின்படி, தொ.மு.ச. பேரவை பொதுச்செயலாளர் மு.சண்முகம் வேண்டுகோளின் படி, விருதுநகர் மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் இணைப்பு சங்கங்கள், சி.ஐ.டி.யு, ஏ.ஐ.டி.யு.சி, டி.யு.சி.சி மற்றும் விவசாய சங்கங்களும், இணைந்து மாவட்டக் கவுன்சில் செயலாளர் ஆர். வி. மாடசாமி தலைமையிலும், த.அ.போ.போக்குவரத்து பொதுச்செயலாளர் ரா.ராஜசெல்வம் முன்னிலையிலும், மின்சார வாரியம் அண்ணாதுரை, சிமிண்ட்ஸ் சௌந்தர்ராஜ், சி.ஐ.டி.யு. சார்பில் மகாலெட்சுமி, பாலசுப்பிரமணியன், எ.ஐ.டி.யு.சி. சார்பில் பாண்டியன், மூர்த்தி, டி.யு.சி.சி சார்பில் இளங்கோவன், போக்குவரத்து கழக நிர்வாகிகளும் மற்றும் தொழிலாளர் உடன்பிறப்புகளும் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.